கல்லூரிகள் – நிதியுதவி பெறாத தனியார் கல்லூரி – டாக்டர் ஆர். வெங்கடேசலுநாயுடு சேவை அறக்கட்டளை– 2006–2007–ம் கல்வியாண்டில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் ரோடு, காரமடை – என்னுமிடத்தில் டாக்டர் ஆர்.வி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க அனுமதி அளிக்கப்படுகிறது.

---

**உயர் கல்வி (இ1) துறை**

அரசாணை (நிலை) எண். 14 நாள். 10.1.2006.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.858, கல்வித் துறை, நாள் 15–7–89
2. அரசாணை (நிலை) எண்.244, உயர் கல்வித் துறை, நாள் 7–5–97.
3. அரசாணை (நிலை) எண்.401, உயர் கல்வித் துறை, நாள் 23–7–97.
4. அரசாணை (நிலை) எண்.165, உயர் கல்வித் துறை, நாள் 23–4–98.
5. கல்லூரிக்கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 55093/கியூ2/2005, நாள் 4.1.2006.

ஆணை :–

கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் ரோடு, காரமடை என்னுமிடத்தில் டாக்டர் ஆர்.வி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்னும் கல்லூரியினை சுயநிதி அடிப்படையில் தொடங்க அனுமதி கோரி டாக்டர் ஆர். வெங்கடேசலுநாயுடு சேவை அறக்கட்டளை விண்ணப்பம் அனுப்பி வைத்துள்ளதாக மேலே 5–ல் படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசுக்கு தெரிவித்துள்ளார். இக்கல்வி முகமை கீழ்க்கண்டவற்றை நிறைவு செய்துள்ளதாகவும் கல்லூரிக் கல்வி இயக்குநர் மேலும் தெரிவித்துள்ளார்:–

(i) கல்லூரிக் கல்வி இயக்குநர் மற்றும் டாக்டர் ஆர். வெங்கடேசலுநாயுடு சேவை அறக்கட்டளையின் பெயரில் கூட்டுக் கணக்கில் தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி கழகத்தில் அறக்கட்டளைத் தொகையான ரூ.20 இலட்சம் கல்வி முகமையால் ஐந்து ஆண்டுகளுக்கு வைப்புத் தொகையாக செலுத்தப் பட்டுள்ளது.

(ii) இக்கல்வி முகமை கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் ரோடு, காரமடை என்னுமிடத்தில் கீழ்கண்ட புல எண்கள் கொண்ட 10.25 ஏக்கர் நிலத்தை கிரயமாக கையகப்படுத்தி உள்ளது.–

| வ.எண் | புல எண் | ஏக்கர் | சென்ட் |
|---|---|---|---|
| 1 | 43/ 1 A | 8 | 18.000 |
| 2 | 43/ 2 B | 0 | 07.000 |
| 3 | 14/1 | 0 | 05.222 |
| 4 | 14/1 | 0 | 05.000 |
| 5 | 14/1 | 0 | 05.012 |
| 6 | 14/1 | 0 | 46.432 |
| 7 | 14/1 | 0 | 17.208 |
| 8 | 14/1 | 0 | 52.091 |
| 9 | 14/1 | 0 | 05.222 |
| 10 | 14/1 | 0 | 05.010 |

| | | | |
|---|---|---|---|
| 11 | 14/1 | 0 | 07.295 |
| 12 | 14/1 | 0 | 05.010 |
| 13 | 14/1 | 0 | 05.010 |
| 14 | 14/1 | 0 | 06.044 |
| 15 | 14/2 | 0 | 08.283 |
| 16 | 14/1 | 0 | 05.420 |
| 17 | 14/1 | 0 | 06.336 |
| 18 | 14/1 | 0 | 05.227 |
| 19 | 14/1 | 0 | 06.342 |
| | Total | 10 | 25 |

(iii) அரசு விதித்துள்ள அனைத்து நிபந்தனைகளையும் கடைப்பிடிப்பதாகத் தெரிவித்து ஒப்பந்தப் பத்திரம் ஒன்றை கல்வி முகமை அளித்துள்ளது.

2. கல்லூரிக் கல்வி இயக்குநரால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட மேற்காண் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து டாக்டர் ஆர்.வி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி என்னும் தனியார் சுயநிதிக் கல்லூரியை 2006–2007–ம் கல்வியாண்டில் கீழ்க்காணும் பாடப்பிரிவுகளுடன் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் ரோடு, காரமடை என்னுமிடத்தில் உள்ள புல எண்கள் 43/ 1 A , 43/2B, 14/1 மற்றும் 14/2 –ல் கட்டிடம் கட்டி நிரந்தரமாக செயல்படவும் அனுமதி அளிக்கிறது:–

1. B.Sc., Computer Science
2. B.Com.,
3. B.Com., (C.A)
4. B.C.A.,
5. B.Sc.Bio-Technology.

3. கல்லூரியில் மேற்காண் பாடப் பிரிவுகள் தொடங்குவதற்கு முன்பாக இக்கல்லூரியின் கட்டிடங்களின் உறுதித்தன்மை பற்றிய சான்றிதழை கல்வி முகமை கல்லூரிக் கல்வி இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். மேலும், மேலே பத்தி 2–ல் அனுமதிக்கப்பட்ட இக்கல்லூரி, கீழ்க்காணும் நிபந்தனைகளையும் நிறைவு செய்யவேண்டும் : –

(அ) 2006–2007–ம் கல்வியாண்டிற்குள், அனைத்துப் பாடப்பிரிவுகளும் தொடங்குவதற்கு முன்பே சார்ந்த பல்கலைக்கழகத்தின் இணைவு பெறுதல் வேண்டும்.

(ஆ) பத்தி 1 (ii) –ல் தெரிவிக்கப்பட்ட இடம் கல்லூரி பயன்பாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப் பட வேண்டும்.

(இ) அரசு எவ்விதமான நிதியுதவியையும் எத்தருணத்திலும் இக்கல்லூரிக்கு வழங்காது.

(ஈ) பார்வையில் படிக்கப்பட்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளை கல்வி முகமை முழுமையாக நிறைவு செய்யவேண்டும்.

(உ) அரசு/பல்கலைக்கழகம் அனுமதித்துள்ள பாடங்களையன்றி வேறு எந்த பாடங்களையும் கல்வி முகமை கல்லூரியில் தொடங்கக் கூடாது.

53

(ஊ) பல்கலைக்கழகம் நிர்ணயித்துள்ள அளவுகோல் மற்றும் கல்வித்தகுதிகளின் அடிப்படையில் மட்டுமே கல்லூரியின் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர் அமர்த்தப்பட வேண்டும்.

(எ) கல்விமுகமை, அரசு அவ்வப்போது நிர்ணயம் செய்யும் ஏற்புடைய கட்டணங்களைத் தவிர முதலீட்டாளர் கட்டணம் அல்லது நன்கொடை ஆகியவற்றை எந்தவிதத்திலும் பெறக்கூடாது.

(ஏ) அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநரால் நிர்ணயம் செய்யப்பட்ட படிப்புக்கட்டணம், சிறப்புக்கட்டணம் விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம் ஆய்வுக் கட்டணம், காப்புறுதிக்கட்டணம் ஆகியவற்றை மட்டுமே கல்லூரி மாணாக்கரிடம் வசூலிக்கவேண்டும்.

(ஐ) கல்விமுகமை, அரசு/கல்லூரிக் கல்வி இயக்குநர் அவ்வப்போது அறிவிக்கும் மாணாக்கர் சேர்க்கைக்கான நெறிமுறைகளைக் கண்டிப்பாக பின்பற்றவேண்டும், மேலும் அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்து, 50 விழுக்காடு இடங்கள் மற்றும் சார்ந்த பல்கலைக்கழகத்திடமிருந்து பெறப்படும் அனைத்து கூடுதல் இடங்களையும் நிரப்ப வேண்டும்.

(ஒ) கல்விமுகமை, இக்கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் போகும் நிலையில் அதனை அரசு ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முன்வராது.

(ஓ) அரசாணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள இதர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டு, பின்னர் உரிய அறிக்கை பெற்று, ஆய்வு மேற்கொண்டு உரிய நிரந்தரக் கட்டிடத்தில், அனைத்து வசதிகளுடன், சிறந்த முறையில் செயற்பட்டு வந்தால் மட்டுமே தொடர்ந்து இக்கல்லூரி செயல்பட அனுமதிக்கப்படும்.

(ஔ) இக்கல்லூரிக்கான கட்டடங்களின் நிலைத் தன்மைக் குறித்த சான்றிதழ், தீயணைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளதற்கான சான்றிதழ் மற்றும் மின் இணைப்பு தரச்சான்றிதழ் ஆகியவை பெறப்பட வேண்டும். மேலும், மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைக்கப்பட வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே.எஸ்.ஸ்ரீபதி
அரசு செயலாளர்.

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர், கோயம்புத்தூர்.
பதிவாளர், பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர்.
தலைவர், டாக்டர் ஆர். வெங்கடேசலுநாயுடு சேவை அறக்கட்டளை,
என்.5,நேதாஜிசாலை, பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் – 641 037.
மாண்புமிகு கல்வி அமைச்சரின் அலுவலகம், சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 10/11/06
பிரிவு அலுவலர்